**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# புதுமை படைக்கும் மாவட்டம் எனும் வீடியோ-வுக்காக ப்ராம்ப்ட்டன் நகரம் சந்தைப்படுத்தல் விருதினை வென்றிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 10, 2022) – ப்ராம்ப்ட்டன் நகரமானது புதுமை படைக்கும் மாவட்டம் எனும் வீடியோ வுக்காக கனடா நாட்டின் பொருளாதார மேம்பாட்டாளர் சங்கத்தின் (EDAC) கனடா சந்தைப்படுத்தல் விருதினை வென்றிருக்கிறது

புதுமை படைத்தல் மற்றும் தொழில் முனைதலுக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதன் மூலம் நகரம் தனது பொருளாதார ஆற்றலைப் புத்துயிர் பெறச் செய்து வருகிறது: அதுவே ப்ராம்ப்ட்டன் புதுமை படைத்தல் மாவட்டம் ஆகும். அக்டோபர் 2021 இல், இந்த புதுமை படைத்தல் சுற்றுச்சூழலின் தாக்கங்களை முன்னிலைப்படுத்த ப்ராம்ப்டன் பொருளாதார மேம்பாட்டு அலுவலகம் தனது புதுமை படைக்கும் மாவட்டம் எனும் வீடியோவை அறிமுகப்படுத்தியது.

புதுமை படைக்கும் மாவட்டம் ஆனது, துவக்கம் செய்வதற்கான அளவீடு செய்தல், முதலீட்டுக்கான ஈர்ப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்துகிறது; மேலும் தொழில்முனைவோர் மற்றும் புதிய வணிகத்திற்கான உள்ளூர் ஆதரவை வழங்குகிறது. புதிய தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் புதுமை படைக்கின்ற மற்றும் தொழில்நுட்பம் சார் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஆதாரவினையும் இது வழங்குகிறது. 2019 லிருந்து ஏற்பட்ட உடன்படிக்கைகளுடன், நகரம் தனது புதுமை படைத்தல் மாவட்டத்தில் தோராயமாக $20.5 மில்லியன் முதலீடு செய்ய உறுதியளித்துள்ளது, மேலும் சுமார் $55.2 மில்லியன் முதலீடுகள் புதுமை படைக்கும் மாவட்டத்தில் உள்ள கூட்டாளர்களால் கொடுக்கப்படுகின்றன.

2019 முதல் 2021 வரை, ஆறு புதிய கூட்டாளர்கள் புதுமை படைக்கும் மாவட்டத்தில் தாங்கள் முன்னிலை வகிப்பதை நிலைநாட்டியுள்ளனர். புதுமை படைக்கும் மாவட்டத்தின் கூட்டாளர்களில் பீஹைவ் ப்ராம்ப்ட்டன் ( (BHive Brampton), ரையர்சன் வழி நடத்துகின்ற வென்ச்சர் ஸோன் (Ryerson-led Venture Zone), ஆல்ட்டிட்யூட் ஆக்சிலரேட்டர் (Altitude Accelerator), ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் (The Founder Institute), அல்கோமா கேட்டலிஸ்ட்டர்ஸ்பெர்ஸ் கேட்டல் (Algoma Ctalystersbers Catal) மற்றும் ரோஜர்க்யூர்ஸ் கேட்டல் பல்கலைக்கழகம் (Rogercures Catal University) போன்ற தொழில் முனைவோர், வணிகம் முற்றி வருவதற்கான காத்திருப்பு, இரண்டாம் நிலை பயிற்சி மற்றும் முடுக்கி விடுவதற்கன இடங்களான ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையம், ஆகியவை அடங்கும். ஷெரிடான் எட்ஜ் (Sheridan Edge), ப்ராம்ப்ட்டன் வர்த்தக கழகம் (Brampton Board of Trade) மற்றும்

டவுண்டவுன் ப்ராம்ட்டன் பி ஐ ஏ (Downtown Brampton BIA) ஆகியவையும் புதுமை படைக்கும் மாவட்டத்தை உருவாக்குவதில் முக்கிய பங்குதாரர்களாக உள்ளன.

கவுன்சில் கால முன்னுரிமை கொண்ட விஷயங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டு வருகின்ற உருமாற்ற முயற்சிகள்தான், முழுமையான சமூகங்களை உருவாக்கவும், பொருளாதார ஆற்றலை வெளிக்கொண்டுவருவதற்கும் மற்றும் புதுமை படைக்கும் தாழ்வாரத்தில் ப்ராம்ப்ட்டனின் தனித்துவமான நிலையை வலுப்படுத்தவும் உதவும்.

கோவிட்-19 தொற்றுப் பரவல் காலம் முழுவதுமாக, டவுண்டவுன் முதலீட்டை நகர நிர்வாகம் தொடர்ந்து ஊக்குவித்தது; ப்ராம்ப்ட்டனின் கருப்பொருளில் புதிய முன்னேற்றங்களை மேம்படுத்துகிறது. நகரத்தின் புதுமை படைக்கும் மாவட்டத்தின் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியானது, அதன் பொருளாதார மீட்பு உத்தியின் முக்கிய அங்கமாகும்; மேலும் சைபர் பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற தொடர்ச்சியான வளர்ச்சிக்கு தயாராக உள்ள துறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் பெருந்தொற்றின் தாக்கங்களிலிருந்து நகரத்தை நகர்த்திச் செல்ல உதவும்.

புதுமை படைக்கும் மாவட்டம் பற்றி மேலும் அறிய வருகை தரவும்: www.bramptoninnovationdistrict.com அல்லது நகரின் புதுமை படைத்தல் மாட்டம் பற்றிய வீடியோவைக் காணவும்.

**கனடாவின் பொருளாதார வளர்ச்சியாளர்களுக்கான சங்கம் மற்றும் கனடா சந்தைப்படுத்தலுக்கான விருதுகள் பற்றி**

EDAC என்பது கனடாவின் பொருளாதார மேம்பாட்டு தொழில்தகமையாளர்களுக்கான தேசிய சங்கமாகும்; இது கனடா முழுவதும் உள்ள ஒவ்வொரு மாகாணம் மற்றும் பிரதேசத்தையும் கிட்டத்தட்ட 1,000 உறுப்பினர்களைக் கொண்டபடி பிரதிநிதித்துவம் செய்கிறது. ஒரு சமூகத்தையே சந்தைப்படுத்துவதுதான் பொருளாதார மேம்பாட்டுத் தொழில் தகைமைக்கான ஒருங்கிணைந்த பகுதியாகும் என்பதை சங்கம் அங்கீகரிக்கிறது. கனடிய நாட்டு மக்களின் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கில், கனடிய மாகாணங்கள், பிரதேசங்கள், பிராந்தியங்கள், மாநகரங்கள், நகரங்கள் மற்றும் சிறுபகுதிகளை ஊக்குவிக்கின்ற மற்றும் சந்தைப்படுத்துகின்ற நிறுவனங்களுக்கென்றே கனடா சந்தைப்படுத்தல் விருதுகள் அமைந்துள்ளன.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் ஒரு அற்புதமான உருமாற்றத்தைக் கடந்து சென்றபடி உள்ளது; எங்கள் கூட்டாளர்களுடன் சேர்ந்து, நாங்கள் எங்கள் புதுமை மாவட்டத்தை ஒரு பெரிய கல்வி மற்றும் புதுமை படைக்கும் மையமாக மேம்படுத்தி வருகிறோம். புதுமை படைத்தலில் உலகளாவிய

முன்னணியாளராக நம்மை வேறுபடுத்திக் காட்டிக்கொள்வதில் சந்தைப்படுத்தல் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் அறிவோம்; இதன் காரணமாகவே, தொடர்ந்து மேலும் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ப்ராம்ப்ட்டனின் பல வலிமைகளை முன்னிலைப்படுத்த உறுதிபூண்டுள்ளோம். கனடாவின் பொருளாதார மேம்பாட்டாளர் சங்கம் எங்கள் புதுமை படைத்தல் மாவட்டம் எனும் வீடியோவை அங்கீகரித்ததில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“டவுண்டவுன் ப்ராம்ப்ட்டனை ஒரு புதுமை படைத்தல் மற்றும் தொழில் முனைவோர் மையமாகத் தொடர்ந்து நிலைநாட்டுவதன் மூலம், நமது குடியிருப்பாளர்கள், மாணவர்கள் மற்றும் வணிகத்திற்குப் பயனளிக்கும் வளர்ச்சிக்கு நாம் உந்துதல் கொடுத்து வருகிறோம். புதுமை படைத்தல் மாவட்டம் எனும் வீடியோவானது, எங்களின் புதுமை படைக்கும் சுற்றுச்சூழல் அமைப்பின் தாக்கங்களை எடுத்துரைக்கும் ஒரு சிறந்த வேலையைச் செய்கிறது; மேலும் நமது டவுண்டவுன் மையத்தில் தொடர்ந்து முதலீட்டைக் கொண்டு வருவதில் அது எங்களுக்கு ஆதரவளிக்கும். கனடாவின் பொருளாதார மேம்பாட்டாளர் சங்கத்தால் அங்கீகாரம் அடைந்திருப்பது பெருமையாக உள்ளது”

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைவர், பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நாம் நமது டவுண்டவுனின் திறனுக்கு புத்துயிரூட்டி வெளிக்கொண்டு வருகிறோம், மேலும் நமது பதுமை படைத்தல் மாவட்டத்தில் முக்கிய முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் முழுமையான சமூகங்களை உருவாக்குகிறோம். ப்ராம்ப்ட்டன் என்றாலே வணிகம்தான்; எங்கள் புதுமை படைக்கும் மாவட்டம் எனும் வீடியோவானது,  அதைக் காண்பிக்கும் ஒரு சிறந்த வேலையைச் செய்கிறது. எங்களின் மதிப்புமிக்க புதுமை படைக்கும்  மாவட்ட பங்காளிகளுடன் சேர்ந்து, உலகத்தரம் வாய்ந்த கல்வி மற்றும் புதுமை படைத்தல் மையத்தை எங்கள் நகரின் மையப்பகுதியில் உருவாக்கி வருகிறோம்.

- *பால் வின்செண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத்தலைவர், பொருளாதார மேம்பாடு மற்றும் கலாச்சாரம், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"எங்கள் பொருளாதார மேம்பாட்டுக் குழுவானது, நமது முழு சமூகத்திற்கும் பயனளிக்கும் வகையில், நமது நகரத்தை கல்வி மற்றும் புதுமை படைத்தலுக்கான ஒரு மையமாக மேம்படுத்துவதில் தொடர்ந்து வழி நடத்துகிறது. கனடாவின் புதுமை படைத்தலுக்கான தாழ்வாரத்தில், மதிப்புமிக்க கூட்டாண்மைகள் மற்றும் திறமையான மற்றும் பலதரப்பட்ட திறமைகள் கொண்ட குழாமில் நாங்கள் பெற்றிருக்கின்ற முதன்மையான இடம் ஆகியவற்றின் மூலம், எங்கள் நகரத்தின் திறனை நாங்கள் வெளிப்படுத்துகிறோம், இது எங்கள் புதுமை படைத்தல் மாவட்டம் எனும் வீடியோவில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.”

- *க்ளார் பார்னெட், இயக்குனர், பொருளாதார வளர்ச்சி, ப்ராம்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca